**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 161** **நாள் : 28.09.2024**

**உலக வெறிநாய்க்கடி நோய் தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நாய் பிடிக்கும் மற்றும் கால்நடை மருத்துவப் பணியாளர்களுக்கான வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி முகாம் இன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் நாய்களோடு நெருங்கிய தொடர்பில் உள்ள நாய் பிடிக்கும் பணியாளர்களுக்கும், இனக்கட்டுப்பாடு மைய ஊழியர்களுக்கும், செல்லப்பிராணிகள் சிகிச்சை மைய பணியாளர்களுக்கும் ஆண்டுதோறும் உலக வெறிநாய்க்கடி நோய் தினத்தன்று வெறிநாய்க்கடி நோய் தடுப்பு நடவடிக்கையாக, பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவு சார்பாக ஒவ்வொரு ஆண்டும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

உலக வெறிநாய்க்கடி நோய் தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வெறிநாய்க்கடி நோய் தாக்கத்திலிருந்து நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவப் பணியாளர்களைப் பாதுகாத்திடும் வகையில் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி முகாம் இன்று (28.09.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இந்த முகாமில் நாய் பிடிக்கும் பணியாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவப் பணியாளர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுவதை நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி அவர்கள் பார்வையிட்டார்.

தொடர்ந்து, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) அவர்கள் நாய் பிடிக்கும் பணியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள், கையுறைகள் மற்றும் நாய் பிடிக்கும் வலைகளை வழங்கினார்.

இம்முகாமில் கால்நடை உதவி மருத்துவர்கள், 215 ஊழியர்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்டது. பாதுகாப்பான முறையில் நாய்களை பிடிப்பதற்காக 79 Butterfly வலைகள் நாய் பிடிக்கும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது,. ஒவ்வொரு ஊழியருக்கும் தலா 3 சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்கப்பட்டது.

பணியாளர்கள் அனைவரும் "ரேபிஸ் இல்லா சென்னை" என்னும் பெருமையை தக்க வைக்க தங்களது பணியினை திறம்பட செய்து சென்னை வாழ் மக்களை ரேபிஸ் என்னும் ஆட்கொல்லி நோயிலிருந்து பாதுகாத்திடவும், அதேபோல அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சீருடையினை பணிநேரத்தின் போது தவறாமல் அணிந்து தற்போது புதிதாக வழங்கப்பட்டுள்ள வலைகளை கொண்டு மனிதாபிமான அடிப்படையில் தெருநாய்களை பிடித்து அறுவை சிகிச்சைக்கு பிறகு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தி அவற்றை மீண்டும் பிடித்த இடத்திலேயே பாதுகாப்பாக விடவும் அறிவுறுத்தப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ். பானுமதி, கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் ஜெ. கமால் உசேன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**